முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்

# முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் - முன்னாள் எம்.பி.- எம்.எல்.ஏ.- மாவட்டச் செயலாளர்கள் - தி.மு.க.வில் இணைந்தனர்!






சென்னை, பிப்.28-

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று (27.02.2026) காலை, சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில் மக்களவை முன்னாள் உறுப்பினர் இரவீந்திரநாத், உசிலம்பட்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பி.அய்யப்பன் மற்றும் மதுரை இரா. கோபாலகிருஷ்ணன், முன்னாள் எம்.பி. புதுவை மாநில அமைப்பாளர் ஓம்சக்தி சேகர், அம்மா பேரவை முன்னாள் துணைச் செயலாளர் டி. ரமேஷ், மாநில வழக்கறிஞர் பிரிவு தலைவர் வழக்கறிஞர் சி.திருமாறன்,

இணைச் செயலாளர் வழக்கறிஞர் திருமதி பி.ராஜலட்சுமி, மாவட்டச் செயலாளர்கள் சென்னை ரெட்சன் சி.அம்பிகாபதி, திருப்பூர் மடத்துக் குளம் கே.மாரிமுத்து, நாமக்கல் பழனிசாமி, மாநில மகளிர் அணி இணைச் செயலாளர் ரீத்தா பழனி சாமி, புதுக்கோட்டை நகர்மன்ற முன்னாள் தலைவர் ராஜசேகர் ஆகியோர் தி.மு.க.வில் இணைந்தனர்.

அதுபோது கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைச்சர்பெருமக்களான எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், பி.கே.சேகர்பாபு, தங்கம் தென்னரசு, தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க.தமிழ்செல்வன், எம்.பி., போடி இலட்சுமணன், முன்னாள் எம்.எல்.ஏ., ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை 26.2.2026 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மீனவர் நல வாரியத் தலைவர் முனைவர் அ. ஜோசப் ஸ்டாலின், அலுவல்சாரா உறுப்பினர்கள் ஏ.தாஜ்தீன், என்.ஜே.போஸ், பி.அந்தோணி ஸ்டாலின், ஏ.ஜோஸ், வி. செல்வபாரதி, ஆர்.வி.கணேஷ், ஏ.பி.பன்னீர்செல்வம், எம்.முருகன், லெனின், கோ.மனோகரன், எம். ஜெபமாலை பர்னாந்து, பி.ஜேசுராஜா, பி.எஸ்.ஜேசுராஜ் மற்றும் தமிழ்நாடு பாரம்பரிய மீனவர் சங்கப் பிரதிநிதிகள் சந்தித்து, மீனவர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர்க்கு வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறைச் செயலாளர் டாக்டர் என். சுப்பையன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை 26.2.2026 அன்று தலைமைச் செயலகத்தில், 5ஆம் வகுப்பு மாணவன் யோகேஸ்வரன் சந்தித்து, நீலகிரி வரையாடுகளைப் பற்றி தான் எழுதிய "அப்போது நான் வரையாடாக இருந்தேன்" – என்ற புத்தகத்தை வழங்கியபோது, முதலமைச்சர் அவர்கள் அம்மாணவனுக்கு அய்யன் திருவள்ளுவர் சிலையினை வழங்கி, வாழ்த்தினார். உடன், அம்மாணவனின் பெற்றோர் சுரேஷ்வரன், திருமதி நிவேதிதா ஆகியோர் உள்ளனர்.

சைதை தாடண்டர் நகரில் 190 குடியிருப்புகளைக் கொண்ட அடுக்குமாடி குடியிருப்புக் கட்டிடம்!

# வேலூர் மாவட்டத்தில் ரூ.45.91 கோடியில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு தங்கும் விடுதிக் கட்டிடம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, பிப்.28-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.2.2026) தலைமைச் செயலகத்தில், பொதுப்பணித் துறை சார்பில் வேலூர் மாவட்டம், பெருமுகை கிராமத்தில் 45 கோடியே 91 இலட்சம் ரூபாய் செலவில் 250 படுக்கைகள் வசதி கொண்ட முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு தங்கும் விடுதிக் கட்டடம் மற்றும் சென்னை, சைதாப்பேட்டை தாடண்டர் நகரில் 99.76 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 190 குடியிருப்புகளைக் கொண்ட அரசு பணியாளர்களுக்கான புதிய அடுக்குமாடி "C" வகை குடியிருப்பு கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்தார்.**

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு தங்கும் விடுதிக் கட்டடம் திறந்து வைத்தல்

வேலூர் மாவட்டத்தில் உள்ள கிறிஸ்த்துவ மருத்துவக் கல்லூரிகளுக்கு (CMC) சிகிச்சைக்காகவும், பணி மற்றும் கல்வி சேர்க்கைக்காகவும் வரும் பொதுமக்கள் தங்கும் நலன் கருதி, வேலூர் மாவட்டம், பெருமுகை கிராமத்தில் 45 கோடியே 91இலட்சம் ரூபாய் செலவில் 68,400 சதுர அடி பரப்பளவில் 250 படுக்கை வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விடுதிக் கட்டடத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இப்புதிய விடுதிக் கட்டடம் தரை மற்றும் மூன்று தளங்களுடன், மொத்தம் 117அறைகளுடன் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் 46 இரட்டை படுக்கைகள் கொண்ட சிறப்பு அறைகள் (Deluxe Room), 49 இரு தனித் தனி படுக்கைகள் கொண்ட சிறப்பு பகிர்வு அறைகள் (Deluxe Twin Share), முக்கிய பிரமுகர்களுக்கான 8 தொகுப்பு அறைகள் (VIP Suite), குடும்பங்களுக்கான 10 சிறப்பு வகை அறைகள் (Family Deluxe) மற்றும் பல நபர்கள் ஓரே இடத்தில் தங்கும் வகையிலான 4 அறைகள் (Dormitory) இடம்பெற்றுள்ளன.

மேலும், சலவையக கட்டடம், பொது கழிப்பறைகள், இரண்டு மின்தூக்கிகள், உயர் மின்னழுத்த மின் இணைப்பு, உணவகம் மற்றும் சமையலறை, சூரிய மின்உற்பத்தி அமைப்பு (Solar Power), ஜெனரேட்டர், கண்காணிப்பு கேமராக்கள், நான்கு மற்றும் இருசக்கர வாகன நிறுத்துமிடம், குடிநீர் வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் இயற்கை எழில் கொண்ட மலைகளின் நடுவே பசுமை சூழலில் இந்த விடுதிக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

சென்னை சைதாப்பேட்டை தாடண்டர் நகரில் அரசுப் பணியாளர்களுக்காக புதிய அடுக்குமாடி "C" வகை குடியிருப்பு கட்டடம் திறந்து வைத்தல்

பொதுப்பணித்துறை சார்பில் சென்னை, சைதாப்பேட்டை, தாடண்டர் நகரில் 99 கோடியே 76 இலட்சம் ரூபாய் செலவில் 2,28,984 சதுர அடி பரப்பளவில் அரசு பணியாளர்களுக்காக கட்டப்பட்டுள்ள புதிய அடுக்குமாடி "C" வகை குடியிருப்பு கட்டடத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இப்புதிய குடியிருப்புக் கட்டடம், கீழ்தளம், தரைத்தளம் மற்றும் 19 மேல் தளங்களைக் கொண்டதாகும். இக்கட்டடத்தில், தலா 700 சதுர அடி பரப்பளவில் வரவேற்பு மற்றும் உணவறை, சமையலறை, இரண்டு படுக்கையறைகள், இரண்டு கழிவறைகள் மற்றும் பால்கனி உள்ளிட்ட முழுமையான வசதிகளுடன்190 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

மேலும், கீழ்தளம் மற்றும் தரைத்தளத்தில், கார் மற்றும் இருசக்கர வாகன நிறுத்துமிட வசதியும், மாற்றுத்திறனாளிகளுக்கான சாய்வுதளம், 3 படிக்கட்டுகள், 5 மின்தூக்கிகள், மின் அறை, தீ அணைப்பு வசதிகள், உட்புற சாலை உள்ளிட்ட அனைத்து அத்தியாவசிய உள்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

# தூத்துக்குடி வடக்கு மாவட்டம் முழுவதும் நல உதவிகள் வழங்கல்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி. கீதாஜீவன் அறிக்கை!



தூத்துக்குடி, பிப். 28–

தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர்–அமைச்சர் பி.கீதாஜீவன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தியாவின் மாபெரும் ஜனநாயக பேரியக்கமாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக மு.க. ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற நாளிலிருந்து தற்போது வரை சந்தித்த அனைத்து தேர்தல்களிலும் தொடர் வெற்றிகளை கழகத்திற்கு பெற்றுத் தந்ததுடன், கழக உறுப்பினர்கள் எண்ணிக்கையையும் காண்போர் வியக்கும் வகையில் உயர்த்தியிருக்கிறார்.

அவர் தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பேற்றதில் இருந்து "எல்லோருக்கும் எல்லாம் என்ற உயரிய தத்துவத்தின் அடிப்படையில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, மகளிர் விடியல் பயணம், புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன், நான் முதல்வன், உலகத்திற்கே முன்மாதிரியாக விளங்கும் பள்ளிக் குழந்தைகளுக்கு காலை உணவுத் திட்டம், பள்ளி மாணவ மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகள், கல்லூரி மாணவ மாணவியரின் கல்வி மேம்பாட்டிற்காக விலையில்லா மடிக்கணினிகள், அன்புக் கரங்கள் திட்டம், தாயுமானவர் திட்டம், அன்புச்சோலை, பணி புரியும் மகளிர் நலனுக்காக தோழி விடுதிகள், உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு பிரதிநிதித்துவம், மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு வங்கிக் கடன், கலைஞரின் கனவு இல்லம், மக்களைத் தேடி மருத்துவம், நம்மைக் காக்கும் 48 என எண்ணற்ற பல மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும், தமிழ்நாட்டு மக்களின் பொருளாதாரம் மேம்பாட்டுக்காகவும், இளைய தலைமுறையின் வளமான எதிர்காலத்திற்காகவும் அல்லும் பகலும் அயராது உழைத்து, எதிர்க்கட்சியினரும் பாராட்டும் வகையில் திராவிட மாடல் பொற்கால ஆட்சியை நடத்தி வரும் திமுக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் 73வது பிறந்த நாள் நாளை (மார்ச் 1ஆம் தேதி) கொண்டாடப்பட உள்ளது.

அன்றைய தினம் தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக சார்பில் மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வட்ட மற்றும் கிளைக் கழக அமைப்புகள் தோறும் கழக கொள்கை பாடல்களை ஒலிபரப்பியும், ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்கியும் சிறப்பாக கொண்டாட வேண்டும்.

மேலும் மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வட்ட மற்றும் கிளைக் கழகங்கள் தோறும் கழகக் கொடிகளை புதுப்பிப்பது, புதிய கொடிகளை ஏற்றி வைப்பது, பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் பெயர்களில் அமைந்துள்ள படிப்பகங்களுக்கு பயனுள்ள புதிய புத்தகங்களை வழங்குவது, கழக முன்னோடிகளுக்கு சிறப்பு செய்வது என கட்சி வளர்ச்சிக்காகவும்,

சமுதாயத்தில் நலிந்த ஏழை எளிய மகளிர், முதியோர், ஆதரவற்றோர், திருநங்கையர், மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு வேண்டிய உதவிகளைச் செய்வது என கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை அவரவரால் இயன்ற நற்பணிகளை செய்து மக்கள் பயனுறும் வகையிலும் கொண்டாட வேண்டும் என கழக செயல்வீரர்களை கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கழகத் தலைவரின் பிறந்தநாளை சிறப்பாகக் கொண்டாடுவோம்!

# மீண்டும் 'திராவிட மாடல்' ஆட்சி அமையப் பாடுபடுவோம்!

## இரா.இராஜீவ் காந்தி தலைமையில் நடந்த மாநில மாணவரணி நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, பிப்.28-

கழக மாணவரணி செயலாளர் இரா.இராஜீவ் காந்தி தலைமையில் நடைபெற்ற மாநில மாணவரணி நிர்வாகிகள் கூட்டத்தில் கழகத் தலைவரின் பிறந்த நாளை மிகச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்றும், மீண்டும் திராவிட மாடல் ஆட்சி அமைய பாடுபடுவோம் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அதன் விவரம் வருமாறு:-

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலில் இளந்தலைவர் அவர்களின் வழிகாட்டுதலில் கழக மாணவர் அணியின் மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் நேற்று (26.02.2026 -வியாழக்கிழமை) காலை 12.00 மணி அளவில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கத்தில் மாநில மாணவரணி செயலாளர் இரா.இராஜீவ் காந்தி தலைமையில் மாநிலத் துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், சேலம் இரா.தமிழரசன், அதலை பி.செந்தில் குமார், தமிழ் கா.அமுதரசன், வி.ஜி. கோகுல், திருமதி பூர்ணசங்கீதா சின்னமுத்து, ஜெ.இராமகிருஷ்ணன், ஆர். சுரேஷ்குமார் முன்னிலையில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள், தமிழ் மாணவர் மன்றம், மாணவர் அணியின் அடுத்தகட்ட ஆக்கப் பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

**தீர்மானம் - 1**
**கழகத் தலைவர் அவர்களுக்கு நன்றி**

தமிழ்நாட்டைக் கல்வியில் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக ஆக்கியதோடு, சிறப்புக் கூட்டுப் பயிற்சிகள் மூலம் ஒன்றிய அரசின் கல்வி நிறுவனங்களில் அரசுப் பள்ளி மாணவர்கள் தேர்ச்சி பெறும் வகையில் சாதனையை நிகழ்த்திக்காட்டியிருக்கும் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

**தீர்மானம் - 2**
**கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள் கொண்டாட்டம்**

கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் 73வது பிறந்த நாளை கழக மாவட்டந்தோறும் மாணவர் அணி சார்பில் கொண்டாடும் பொருட்டு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து நடத்திட இக்கூட்டம் தீர்மானிக்கிறது.


**தீர்மானம் - 3**
**மீண்டும் திராவிட மாடல் 2.0 அமைய உழைத்தல்**

2026 சட்டமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் 2.0 ஆட்சியை மீண்டும் அமைத்து கழக இளந்தலைவர் அவர்களின் கரங்களை வலுப்படுத்த கழக மாணவர் அணி திண்ணைப் பிரசாரங்கள், நான் முதல்வன், தமிழ்ப்புதல்வன் திட்டங்களை மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி கழக மாணவர் அணி பொறுப்பாளர்கள் மூலம் தமிழ் மாணவர் மன்றத்தின் மூலம் கொண்டு சேர்த்து தேர்தல் பணியாற்றிட இக்கூட்டம் முடிவு செய்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருத்துறைப்பூண்டி இர.செல்வராசன்
### பிப்ரவரி 28 (1992)



திருத்துறைப்பூண்டி நகரச் செயலாளராகவும் – பேரூராட்சி மன்றத் தலைவராகவும் பணியாற்றியவர்.

'மிசா'விலும் மற்றும் தலைமைக் கழகம் அறிவித்த சட்ட எரிப்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களிலும் பங்கேற்றுச் சிறை சென்றவர்.

குடந்தை, மகாமகக் குள மரணங்கள் குறித்து நீதிவிசாரணை கோரி, கழகத்தின் சார்பில் நடைபெற்ற கண்டனப் பேரணியில் பங்கேற்றபோது மாரடைப்பால் காலமானார்.

"திருத்துறைப்பூண்டி வட்டாரத்தில் கழகச் சிங்கமாக நடைபோட்டு, அடங்காத ஆர்வத்துடன் பணியாற்றிய தம்பி. சாவு முனையிலும் அந்தத் தம்பி கழகப் பணியே ஆற்றியுள்ளார்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.